## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 31/2025**

Deposition of Witness of PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : பாசில் | Calling | : |
| Father/Husband's Name | : நவாஸ் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 3rd July 2025.

எதிரிகள் ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கொக்கராயன்பேட்டையில் வசித்து கொண்டு பள்ளிபாளையத்தில் ஜுவா செட்டிற்கு அருகில் அங்கிருக்கும் பெட்ரோல் பங்கில் வேலை பார்க்கிறேன். கடந்த 01.02.2023 ம் தேதி பரிசல்துறை அருகில் உள்ள ஸ்ரீஜெய்சக்தி டிரேடர்ஸ் பெட்ரோல் பங்கில் பம்ப் பாயாக வேலை செய்தேன். அன்று காலை 9.00 மணிக்கு வேலைக்கு வந்தால் மறுநாள் காலை 9.00 மணி வரை பணியில் இருப்பேன். இந்த சம்பவத்தன்று பணியில் இருந்தபோது இரவு 9.15 மணியளவில் நான் பம்ப் ஆப்ரேட்டராக இருந்தேன், காசாளராக மனோகரன் இருந்தோம். மற்றொரு பம்ப் ஆப்ரேட்டர் ராமகிருஷ்ணன் பணியில் இருந்தார்.

2. கருப்பு நிற பல்சர் பைக்கில் 2நபர்கள் பரிசல்துறையில் இருந்து வந்தார்கள். அவர்கள் மேற்கு புறம் நான் பம்ப் ஆப்ரேட்டராக இருக்கும் மிசின் அருகே உள்ள டேபிள் பக்கம் பைக்கை நிறுத்தினார்கள். அந்த பைக்கில் பின்புறம் உட்கார்ந்து இருந்த நபர் பெட்ரோல் பங்கில் கேசியரான மனோகரனை பார்த்து பைக்கில் பின்னால் உட்கார்ந்து வந்த நபர் தன்னுடைய தோளில் மாட்டி இருந்த பேக்கில் இருந்த அரிவாளை எடுத்து பேக்கை கொடுங்கள், இல்லையென்றால் அரிவாளால் வெட்டிவிடுவேன் என காசாளர் மனோகரனை பார்த்து மிரட்டினார். மிரட்டி கொண்டே மேற்படி பின்னால் உட்கார்ந்து இருந்த

நபர் மனோகரின் தோளில் இருந்த பேக்கை பறித்தார். அப்போது பைக்கை ஓட்டி வந்த நபர் கேசியர் மனோகரன் உட்கார்ந்து இருந்த டேபிளை பிடித்து ஆட்டினார். அதை தடுப்பதற்காக நான்போனபோது கத்தியை எடுத்து மிரட்டியதால் நான் பயந்து கொண்டு ஓடி விட்டேன்.

3. பின்பு இதுசம்பந்தமாக எங்களது பெட்ரோல் பங்க் உரிமையாளர் சித்ரா அம்மாவிற்கு போன் செய்து சொன்னேன்.அவர் வந்து எங்களை விசாரித்து கேமரா மற்றும் பெட்ரோல் பங்கை செக் செய்தார்கள். பின்பு இது சம்பந்தமாக புகார் கொடுத்தார்கள். பேக்கில் பணம் இருந்தது. அதை தான் பறித்தார்கள். ஆஜர் எதிரிகள் இருவரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. அதனால் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் அடையாளத்தை குறித்து சாட்சி இன்று முன்னிலையாகியிருந்தால் தனக்கு அடையாளம் தெரியும் என கூறியதால் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் எதிரிகளின் அடையாளம் குறித்து சாட்சியின் சாட்சியத்தை பொருத்து ஆட்சேபனை இல்லை.

4. பைக்கை ஓட்டிவந்த நபர் ப்ளு கலர் சட்டையும்,பின்னால் அமர்ந்து வந்த நபர் சந்தன கலர் சட்டையும் அணிந்திருந்தார்கள். பின்னர் 25.05.2024ம் தேதி மொடக்குறிச்சி காவல்நிலையத்திற்கு என்னை போலீஸார் மேற்படி பெட்ரோல் பங்கை கொள்ளையடித்த நபரை பிடித்து வைத்துள்ளதாகவும் வந்து அடையாளம் காட்டுமாறும் சொன்னார்கள். நான் காலை 10.00மணிக்கு மொடக்குறிச்சி காவல் நிலையம் சென்று அங்கு இருந்த நபரை பார்த்து அடையாளம் காட்டினேன். காவல்நிலையத்தில் இருந்த நபர் பெட்ரோல் பங்கில் கொள்ளையடிக்க வந்தபோது சந்தனகலர் சட்டை அணிந்திருந்தார். இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கு சம்பவத்திற்கு 10 நாட்களுக்கு முன்பு தான் அங்கு பணியில் சேர்ந்தேன். சம்பவ நாளன்று அங்கு வேலை பார்த்தற்கான ஆதாரத்தை போலீஸார் என்னிடம் பெற்றார்களா என்றால் இல்லை. இந்த சம்பவம் குறித்து பெட்ரோல் பங்க் உரிமையாளர் சித்ராவிற்கு நான் தகவல் சொன்னேன். உரிமையாளருக்கு போன் செய்து பணம் ரூ.48,200தொகையை கொள்ளையடித்து சென்றுவிட்டதாக சொன்னேனா என்றால் பணம் கொள்ளைபடித்ததை சொன்னேன், எவ்வளவு என்று சொல்லவில்லை. கேசியர் தோளில் ப்ரவுன் கலர் பேக் மாட்டியிருந்தார். கொள்ளையடிக்க வந்த நபர் என்ன பேக் மாட்டியிருந்தார் பள்ளி பேக் நீல கலரில் மாட்டியிருந்தார்.

2. பைக்கை ஓட்டிவந்தவர் டேபிளை ஆட்டி பிரச்சனை செய்தார், பின்னால் உட்கார்ந்து வந்த நபர் கத்தியை காட்டி மிரட்டினார். எந்த திசையில் இருந்து பைக்கில் வந்தார்கள் என்றால் பரிசல் துறை நால்ரோட்டில் இருந்து கொக்காராயன் பேட்டை போகும் வழியில் வந்தார்கள். பெட்ரோல் பங்கில் 2 பம்ப் இருந்தது. அது தெற்கு பார்த்து உள்ளது. பைக் வேகமாக வந்த நபர்கள் எந்த திசையில் பைக்கை நிறுத்தினார்கள் என்றால் டேபிள் பக்கத்தில் பம்புக்கு தெற்கு பக்கமாக பைக்கை நிறுத்தினார்கள். என்ன மாடல் பைக்கில் வந்தார்கள் என போலீஸாரிடம் சொன்னேனா என்றால் மாடல் இல்லை.

3. உரிமையாளருக்கு எத்தனை மணிக்குதகவல் சொன்னேன் என்றால் சுமார் 9.20க்கு சொல்லியிருப்பேன். ஓனர் வீடு லக்காபுரத்தில் உள்ளது அங்கு நான் சென்றுள்ளேன். ஓனர் வீட்டில் இருந்து பெட்ரோல் பங்க் வர சுமார் 20 நிமிடம் ஆகும் என்றால் சரிதான். ஓனர் பெட்ரோல் வந்தவுடன் பணம் எவ்வளவு கொள்ளையடிக்கப்பட்டது என கேசியர் சொன்னாரா என்றால் ரீடிங் எடுத்து கணக்கு முடித்து சொன்னார். ரீடிங் எடுத்து கணக்கு முடிக்க எவ்வளவு நேரம் ஆனது என்றால் 11.00 மணிக்கு சொன்னார். சம்பவ தினத்தன்று போலீஸார் வந்தார்களா என்றால் வந்தார்கள். போலீஸாருக்கு சித்ராவும், செந்தில்குமாரும் தகவல் சொன்னார்கள்.

4. தகவல் சொல்லி போலீஸார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் 20 நிமிடத்தில் வந்தார்கள். எத்தனை போலீஸார் வந்தார்கள் என்றால் 4 போலீஸார் வந்தார்கள். அவர்கள் மொடக்குறிச்சி போலீஸார்கள் என்று சொன்னார்கள்.வேறு யாரும் வரவில்லை.அவர்கள் எங்களை விசாரித்தார்கள். மறுநாள் காலை புகார் கொடுக்குமாறு சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள். காவல்நிலையத்தில் நான் அடையாளம் காட்ட சென்ற நபர் முகக்கண்ணாடி அணிந்திருந்தரா என்றால் இல்லை. கேசியர் மனோகர் பேக்கில் என்ன வகையான நோட்டுகள் இருந்தது என்றால் ரூ.500, ரூ.100, ரூ.10,ரூ.50 எல்லா நோட்டுகளும் கலந்து இருந்தது.

5. போலீஸார் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள். நான் சாட்சியாக புகாரில் கையெழுத்து செய்தேன். பின்னிட்டு போலீஸார் மீண்டும் விசாரிக்கவில்லை. போலீஸார் எங்களதுபெட்ரோல் பங்கில் பெட்ரோல் போட வருவார்களா என்றால் வருவார்கள். போலீஸாருக்கும் எனது உரிமையாளருக்கும் நல்ல பழக்கம் உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் மீது புள்ளிவிபர கணக்கிற்காக போலீஸார் போட்டுள்ள வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீஸாரின் அனுசரனை வேண்டும் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்காக அவர்கள் போட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம்அளிக்கிறேன். போலீஸார்

எனக்கு காலையில் மேற்படி சாட்சியம்அளிக்குமாறு சொன்னார்களா என்றால் இல்லை, என்ன நடந்ததோ அதை சொன்னேன்.எதிரிக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

1ம் எதிரி வழக்கறிஞர் முன்னிலையாகியும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை சாட்சியம் முடித்து வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை இல்லை**

ஓம்/– சாட்சி பாசில்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 31/2025**

Deposition of Witness of PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : P. மனோகரன் | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 3rd July 2025.

எதிரிகள் ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் தற்போது ஈரோட்டில் வசித்து கொண்டு பரிசல்துறையிலிருந்து குமரபாளையம் செல்லும்ரோட்டில் ஆற்றுபாலம் அருகில் உள்ள ஸ்ரீ ஜெய்சக்தி டிரேடர்ஸ் HP பெட்ரோல் பங்கில் காசாளராக பணிபுரிந்து வருகிறேன். 01.02.2023 ம் தேதி காலை 9.00மணிக்கு பெட்ரோல் பங்கிற்கு வேலைக்கு சென்றேன். இரவு 8.00 மணிக்கு எங்களுடைய ஓனர் செந்தில்குமாரின் மாமனார் துரைசாமி இருந்தார். அன்றைய வசூல் தொகை ரூ.1,50,000த்தை 8.00மணிக்கு துரைசாமி வாங்கி சென்றார். மீதி இருப்பு ரூ.4000 இருந்தது. இரவு 8.00 மணிக்கு பின் 9.00 மணிவரை ரூ.44,200/- வசூலானது. ஆக மொத்தம் ரூ.48,200 ரூபாய் இருந்தது.

2. இரவு 8.50 மணியிலிருந்து 9.00மணிக்கு 2 நபர்கள் பைக்கில் பெட்ரோல் பங்கிக்கு வேகமாக வந்தார்கள். நான் டேபிளில் அமர்ந்து இருந்தேன். பங்கில் பெட்ரோல் போடும் 2 நபர்கள் என் அருகில் இருந்தார்கள். பைக்கில் ஓட்டி வந்தவர் ப்ளூ கலர் சட்டை ஆஜர் எதிரிகள் இருவரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. அதனால் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் அடையாளத்தை குறித்து சாட்சி இன்று முன்னிலையாகியிருந்தால் தனக்கு அடையாளம் தெரியும் என கூறியதால் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் எதிரிகளின் அடையாளம் குறித்து சாட்சியின் சாட்சியத்தை பொருத்து ஆட்சேபனை இல்லை.அணிந்திருந்தார். பின்னால் அமர்ந்து வந்தவர் சந்தன

கலர் சட்டை அணிந்திருந்தார். 2 பேரும் எனது டேபிளில் அருகில் வேகமாக வந்த நிறுத்தி பைக்கை நிறுத்தி 2 பேரும்இறங்கிவிட்டார்கள். ப்ளூ கலர் சட்டை அணிந்திருந்தவர் டேபிளை பிடித்து குலுக்கினார். சந்தனகலர் சட்டை அணிந்திருந்தவர் பெரிய அரிவாளை எடுத்து எனது கழுத்தில் வைத்து பணத்தை தருகிறாரா அல்லது கழுத்தை வெட்டட்டுமா என்று மிரட்டினார். நான் பதட்டத்தில் இடது கை தோள்பட்டையில் இருந்த பேக் நழுவும் போது அதை சந்தன கலர் சட்டை அணிந்திருந்த நபர் பிடிங்கிவிட்டார்.

3. இருவரும் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். அந்த 2 நபர்கள் வந்த வாகனம் பல்சர் பைக் ஆகும். ஆஜர் எதிரிகள் இருவரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. அதனால் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் அடையாளத்தை குறித்து சாட்சி இன்று முன்னிலையாகியிருந்தால் தனக்கு அடையாளம் தெரியும் என கூறியதால் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் எதிரிகளின் அடையாளம் குறித்து சாட்சியின் சாட்சியத்தை பொருத்து ஆட்சேபனை இல்லை. பெட்ரோல் பங்கில் எனது அருகில் இருந்தவர்கள் பாசில் மற்றும் ராமகிருஷ்ணன் ஆவார்கள்.

4. பெட்ரோல் பங்கில் இருந்து என்னிடம் பணத்தை பறித்து கொண்டு அவர்கள் சென்ற உடனே நான் இதுகுறித்து பெட்ரோல் பங்க் உரிமையாளர் சித்ரா அம்மாவிற்கு போன் செய்தேன். உடனே பெட்ரோல் பங்கிற்கு உரிமையாளர் செந்தில்குமார், அவரது மனைவி சித்ரா மற்றும் செந்தில்குமாரின் மாமனார் துரைசாமி ஆகியோர் இரவு 9.20மணிக்கு வந்துவிட்டார்கள். பின்பு தொலைபேசி மூலம் மொடக்குறிச்சி காவல்நிலைய போலீஸாருக்கும் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கும் தகவல் கொடுத்ததின்பேரில் அங்கு வந்து இரவு முழுவதும் கண்காணிப்பு கேமரா பதிவுகளை பார்த்து இரவு நெடுநேரம் ஆனதால் வழக்கு சம்பவம் குறித்து மறுநாள் காவல்நிலையத்திற்கு நான், பெட்ரோல் பங்க் உரிமையாளர் செந்தில்குமார், ராமகிருஷ்ணன், மற்றும் பெட்ரோல் பங்க் ஊழியர் செந்தில்குமார் ஆகியோர் சென்று பெட்ரோல் பங்க் உரிமையாளர் புகார் கொடுத்தார் என்று சாட்சி முதலில் கூறிவிட்டு தற்பொழுது நான் கைபட எழுதி புகார் கொடுத்தேன் என்று குறிப்பிடுகிறார்.

5. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர்** 1 மாதம் கழித்து மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் இருந்து ஆய்வாளர் எனக்கு போன் செய்து எங்கள் பெட்ரோல் பங்கில் பணம் கொள்ளையடித்த நபர்களை பிடித்து விட்டதாகவும் அவர்களை அடையாளம் காட்ட வருமாறும் என்னிடம்

சொன்னார். அதன் அடிப்படையில் நான், ராமகிருஷ்ணன் மற்றும் பெட்ரோல் பங்க் உரிமையாளர் செந்தில்குமார் ஆகியோர் காலை 10.00மணிக்கு மொடக்குறிச்சி காவல்நிலையத்திற்கு சென்றோம். அப்போது அங்கு பிடித்து வைக்கப்பட்டிருந்த நபரை ஆய்வாளர் என்னிடம் விசாரித்த போது பெட்ரோல் பங்கில் என்னிடம் பணத்தை கொள்ளையடித்து சென்ற நபர் என்றும், அந்த நபர் தான் இந்த வழக்கு சம்பவத்தின் போது பைக்கை ஓட்டி வந்த நபர் என அடையாளம் காட்டினேன். மேற்படி நபரின் பெயர் குமரேசன் என்று கூறி ஆய்வாளர் மேற்படி நபரின் அடையாளத்தை உறுதிபடுத்தினார். இந்த வழக்கில் என்னிடம் இருந்து கொள்ளையடித்த பணத்தை பெட்ரோல் பங்க் உரிமையாளர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டார். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஸ்ரீ ஜெய்சக்தி டிரேடர்ஸ் பெட்ரோல் பங்கில் சுமார் 5 வருடமாக வேலை செய்து வருகிறேன். பெட்ரோல் பங்கிற்கு பலதரப்பட்ட இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் வந்து பெட்ரோல், டீசல் நிரப்பி செல்வதால் எனக்கு வாகனங்களை குறிப்பிட்டு வாகனங்களின் பெயர் அடையாளம் தெரியும் என்றால் சரிதான். எங்கள் பங்கிற்கு போலீஸார்கள் அடிக்கடி வந்து பெட்ரோல் அடித்து செல்வார்கள் என்றால் சரிதான். பெட்ரோல் பங்க் உரிமையாளருக்கும், மொடக்குறிச்சி காவல்நிலைய காவலர்களுக்கும் நல்ல பழக்க வழக்கம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு எப்படிதெரியும்.

2. பணத்தை கொள்ளையடித்ததாக சொல்லும் 2 நபர்கள் எந்த திசையில் இருந்து எங்கள் பெட்ரோல் பங்கிற்கு வந்தார்கள் என்றால் மேற்கு திசையில் இருந்து வந்தார்கள். பெட்ரோல் பங்கில் எத்தனை பம்புகள் உள்ளது என்றால் 2 பம்ப் உள்ளன. உள்ளே வந்த 2 நபர்கள் பம்ப்க்கு எந்த திசையில் நின்றார்கள் என்றால் கிழக்கு புறமாக நின்றார்கள். எனது டேபிள் எந்த திசையில் இருந்தது என்றால் கிழக்குபார்த்து அமர்ந்து இருந்தேன். பெட்ரோல் பங்கில் மழை நீர் உள்ளே வராதவாறு செட் அமைத்து மின்விளக்குகள் நிறைய இருக்கிறது என்றால் சரிதான். பெட்ரோல் பங்கை சுற்றியும் வெளிச்சமாகவும், பிரகாசமாகவும் இருக்கும் என்றால் சரிதான்.

3. என்ன கலரில் நான் பேக் வைத்திருந்தேன் என்றால் கருப்பு கலர். கொள்ளையடித்ததாக சொல்லும் நபர்கள் என்ன கலரில் பேக் வைத்திருந்தார்கள் என்றால் கருப்பு கலர். நான்பேக்கில்வைத்திருந்த ரூ.44,200 தொகைளில் என்ன வகையான நோட்டுகள் என்றால் எல்லா வகையான நோட்டுகளும் இருந்தன. நான் கொடுத்த புகாரில் என்ன வகையான நோட்டுகள் என்று குறிப்பிட்டு

சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, மொத்த தொகையைத்தான் சொல்லியுள்ளேன். போலீஸாரிடம் சொல்லியுள்ளேன். சுமாராக ரூ.500, ரூ.200, ரூ.100 எத்தனை நோட்டுகள் இருந்திருக்கும் என்றால் நான் உயிர்பயத்தில் இருந்ததால் அந்த விபரத்தை தெரிந்து கொள்ளவில்லை. பெட்ரோல் பங்கிற்கும், உரிமையாளர் வீட்டிற்கும் எவ்வளவு துாரம் இருக்கும்என்றால் சுமார் 5 கிலோமீட்டர் துாரம் இருக்கும். உரிமையாளர் வீடு லக்காபுரத்தில் உள்ளது. உரிமையாளர் வீட்டிற்கு நான் சென்றதில்லை. அவர்கள் சொல்லிதான் அவர்கள் வீடு லக்காபுரத்தில் உள்ளதாக எனக்கு தெரியும்.

4. லக்காபுரத்தில் இருந்து பெட்ரோல் பங்கிற்கு வரவேண்டும் என்றால் சுமார் 15 நிமிடத்தில் இருந்து 30 நிமிடங்கள் ஆகும் என்றால் சரிதான். போலீஸாருக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் உரிமையாளர் வந்து தான் போலீஸாருக்கு தகவல் சொன்னார். போலீஸார் சுமார் எத்தனை மணிக்கு பெட்ரோல் பங்க் வந்தார்கள் என்றால் சுமார் இரவு 9.45மணி இருக்கும். போலீஸார் மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் இருந்து வந்தபோதே காவல் கண்காணிப்பாளர் உடன் வந்தாரா என்றால் இல்லை, அவர் தனியாகத்தான் வந்தார். புகார் கொடுக்கும் போது யார் யார் சென்றோம் என்றால் நான், எனது உரிமையாளர் செந்தில்குமார், ராமகிருஷ்ணன் ஆகியோர்கள் சென்றோம்.

5. நான் புகார் எழுதியதில் சாட்சியாக உரிமையாளர் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். புகாரில் எதிரிகள் என்ன வாகனத்தில் வந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் அது ஞாபகம் இல்லை. போலீஸார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் பல்சர் வாகனம் என்று சொல்லியுள்ளேன். சந்தனகலர் சட்டை அணிந்த நபர் எனது கழுத்தில்அரிவாளை வைத்து பணத்தை தருமாறும் இல்லையெனில் கழுத்தை வெட்டிவிடுவேன் என மிரட்டியதாக புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். CCTV கேமரா பதிவுகளை போலீஸார் எங்கள் அலுவலகத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொண்டார்களா என்றால் அதுபற்றி தெரியவில்லை. ஆனால் பார்த்தார்கள். நான் புகார் கொடுத்தபோது எங்கள் அலுவலகத்தில் இருந்த CCTV கேமரா பதிவுகளை போலீஸார் வசம் ஒப்படைக்கவில்லை.

6. நான் என்னிடம் இருந்த தொகைகளில் என்ன வகையான நோட்டுகள் எவ்வளவு இருந்தது என தெரியாதநிலையில் எவ்வாறு ரூ.48,200 காணாமல் போனதாக எனது உரிமையாளர் செந்தில்குமாரிடம் கூறினேன் என்றால் நான் பெட்ரோல் பங்க் உரிமையாளருக்கு போன் செய்த போது எவ்வளவு பணத்தை கொள்ளையடித்தார்கள் என்று குறிப்பிட்டு தொகை சொல்லவில்லை, எனது

உரிமையாளர் வந்தபிறகு பெட்ரோல் பங்கில் அதில் உள்ள ரீடிங் பார்த்தும், அலுவலகத்தில் ஆட்டோமிசினை பார்த்தும் மேற்படி ரூ.48,200 கொள்ளை போனது என தெரியவந்தது. காவல்நிலையத்திற்கு எதிரியை அடையாளம் காட்ட சென்றபோது சந்தனகலர் சட்டை அணிந்த நபர் இருந்தாரா என்றால் இல்லை, நீல கலர் சட்டை அணிந்த நபர் இருந்தார்.

7. நீல கலர் சண்டை அணிந்த நபர் காவல்நிலையத்தில் முகக்கண்ணாடி அணிந்து அமர்ந்து இருந்தாரா என்றால் சரியாக ஞாபகம்இல்லை. ஆனால் இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தால் நான் அடையாளம் காட்டியிருப்பேன். சம்பவம் நடந்ததாக சொல்லும்அன்று பெட்ரோல் பங்கில் போலீஸார் நடந்ததை எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் என்னை விசாரித்துவிட்டு மறுநாள் காவல்நிலையம் வருமாறு சொன்னார்கள். போலீஸார் அன்று இரவே பெட்ரோல் பங்கிற்கு வந்துள்ள நிலையில் கொள்ளையடித்த பணம் ரூ.48,200என தெரிந்துள்ள நிலையில் நாங்கள் ஏன் உடனடியாக புகார் கொடுக்கவில்லை என்றால் அதிகாலை 1.00 மணி ஆகிவிட்டதால் மறுநாள் காலை புகார் கொடுத்தோம்.

8. ரூ.48,200 காணாமல் போனதாக எத்தனை மணிக்கு கண்டுபிடித்தோம் என்றால் இரவு சுமார் 11.30 மணியிலிருந்து 12.00 மணி இருக்கும். நான் பெட்ரோல் பங்கில் வேலை செய்ததால் உரிமையாளருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்பதால் தான் CCTV கேமரா பதிவுகளுடன் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, நடந்ததை சொல்லியுள்ளேன். எதிரிகள் மீது புள்ளிவிபர கணக்கிற்காக போலீஸார் போட்டுள்ள வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீஸாரின் அனுசரனை வேண்டும் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்காக அவர்கள் போட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம்அளிக்கிறேன்.

1ம் எதிரி வழக்கறிஞர் முன்னிலையாகியும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை சாட்சியம் முடித்து வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை இல்லை**

ஒம்/– சாட்சி மனோகரன்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.